 SRES  NFIR 

# தென்பகுதி இரயில்வே தொழிலாளர் சங்கம்

## மத்திய சங்கம் – பெரம்பூர்

## கிருஸ்துமஸ் & 2019 புத்தாண்டு, பொங்கல், குடியரசு தின நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த தொழிலாள சகோதர, சகோதரிகளுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் கிருஸ்துமஸ் மற்றும் **2019ம் ஆண்டின் இனிய புத்தாண்டு, பொங்கல், குடியரசு தின நல்வாழ்த்துக்களை** SRES - NFIR **தெரிவிக்கிறது. 07–02–1919** ஆம் ஆண்டு பெரம்பூரில் SRES துவங்கப்பட்டு **3–9–1927**ம் ஆண்டு அண்ணல் மகாத்மா காந்தி மற்றும் கஸ்தூரிபாய் அம்மையார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தொழிலாளர்களின் பேராதரவோடு அடியெடுத்து வைத்து நூற்றாண்டை கொண்டாட உள்ளோம். ஆங்கிலேயரின் அடிமை சாசனத்திலிருந்து நாடு விடுதலை பெற SRES சுதந்திர போராட்டத்தில் முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பல்வேறு அறப்போராட்டங்களை இரயில்வேயில் நடத்தி ஆங்கிலேயரை திணற வைத்தது அன்று!

பெரம்பூரில் உள்ள SRESன் மத்திய சங்க ஒற்றுமை நிலையத்திற்கு தேசிய தலைவர்களான திரு. வல்லபாய் படேல், சட்ட மாமேதை **Dr. B.R. அம்பேத்கார், திரு. ஜவஹர்லால் நேரு, திரு. ஜெயபிரகாஷ் நாராயணன், திரு.K.காமராஜர், திருமதி. இந்திராகாந்தி, திரு.ராஜாஜி** போன்ற பலர் வருகை தந்து சிறப்பித்துள்ளார்கள். **1929** முதல் **1934** வரை SRESற்கு தலைவராக இருந்த **திரு.V.V.கிரி** அவர்கள் இந்திய நாட்டின் குடியரசு தலைவராக பொறுப்பேற்று பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இரயில்வே தொழிலாளர்களுக்காக பல்வேறு நன்மைகளை செய்து தன் வாழ்நாள் முழுவதும் தன்னலமின்றி உழைத்திட்ட தொழிற்சங்க மாமேதை மறைந்த **திரு. T.V.ஆனந்தன்,**Ex.M.P. அவர்களை நெஞ்சில் நினைத்து பார்க்கிறோம். அன்று இரயில்வே தொழிலாளர்களுக்காக பென்ஷன் திட்டத்தை அவர் கொண்டு வந்த போது கேவலமாக பேசியவர்கள் எல்லாம் பிறகு ஓய்வு பெற்றவுடன் அவர்கள் வாழும் காலத்தில் தான் அதன் மகிமையை கண்டு வியந்து பாராட்டியதும், தவறாக பேசியதற்கு வருந்தியதும் உண்மை. இரயில்வே தொழிலாளர்களுக்கு நல்லதை செய்வேன் என்று சொல்லி தற்போது ஆட்சி செய்கிற மத்திய அரசின் தொழிலாள விரோத போக்கை கண்டித்து SRES - NFIR போராடி வருகிறது இன்று! அன்று முதல் இன்று வரை மத்திய அரசிடம் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும், பாராளுமன்றம் மற்றும் இரயில்வேயில் உள்ள அனைத்து GM/DRM/CWM அலுவலகங்கள், பணிமனைகள், டிப்போக்கள் முன்பாகவும் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை நடத்தியதின் பயனாகத் தான் ஏழு சம்பள கமிஷன்களை அமைத்து அதனோடு விவாதம் செய்து பல உத்திரவுகளை பெற்று அமுல்படுத்திய சங்கம் தான் SRES - NFIR என்பதை அனைவரும் அறிவீர்கள். முக்கிய பல கோரிக்கைகளை வென்றிட SRES - NFIR தலைமையில் இணைந்து செயல்பட அனைவரையும் வாரீர் வாரீர் என்று அழைக்கிறோம்.

### SRES - NFIR செய்த சாதனைகளில் சில..

1. **1954**ல் பென்ஷன் / குடும்ப பென்ஷன் திட்டத்தை அமுல்படுத்தி தொழிலாளர்களை வாழ வைத்திருப்பது.
2. தாஸ் கமிட்டி மூலம் கடந்த **42** ஆண்டுகளாக **6** மாதத்திற்கு ஒரு முறை DA உயர்வு பெற்றுத் தந்தது.
3. **1979**ல் போனஸ் சட்டத்தை அமுல்படுத்தி அனைவருக்கும் PLB போனஸ் பெற்றுத்தந்தது மட்டுமல்லாமல் **2006 –07க்கு ரூ.2301/–, 2014–15க்கு ரூ.8976/–** அரியர்ஸாகவும் பெற்று தந்தது.
4. **10** ஆண்டுகளுக்கு ஒருமுறை CRC மூலம் அப்கிரேடேஷன் பெற்று தந்தது.
5. HRA, இன்சென்டிவ், OT அலவன்ஸ்களையும் மற்றும் அட்வான்ஸ்களையும் பெற்று தந்தது.
6. ACP க்கு பிறகு MACPS மூலம் **3** அப்கிரேடேஷன்களை பெற்று தந்தது.
7. CCL, En Cashment Leave, மாற்று திறனாளிகளுக்கு **4** நாட்கள் SCL பெற்று தந்தது.
8. LARSGESS திட்டத்தின் மூலம் வாரிசுகளுக்கு வேலை பெற்று தந்தது.
9. இரயில்வே தொழிலாளர்கள் அனைவருக்கும் AC கோச்சில் செல்ல பாஸ் பெற்று தந்தது.
10. இறந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கம்பாஸினேட் அப்பாயின்ட்மெண்ட் பெற்று தந்தது.

### நேஷனல் பென்ஷன் திட்டம்

ஏற்கனவே NFIR - Rly, Bd., PNM Sub No.20/2006 மூலம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியதின் அடிப்படையில் **01.01.2004**க்கு பிறகு வேலையில் சேர்ந்த இரயில்வே தொழிலாளர்களுக்கு பென்ஷன் / குடும்ப பென்ஷன் வழங்க Rly. Bd., யிடமிருந்து **29.05.2009** அன்றும் (RBE No.31/2009 dt, 29.5.2009) மீண்டும் Rule 38,49,50& 54 of CCS (Únsion) Rules 1972 அடிப்படையில் பென்ஷன், குடும்ப பென்ஷன் இன்வேலிட் பென்ஷன், DCRGஐ **31.7.2017** அன்று உத்தரவாக பெற்றது.

பணியின் போது இராணுவத்தினரை காட்டிலும் இரயில்வே துறையில் தான் உயிரிழப்பு அதிகம். எந்த துறையையும் ஒப்பிட முடியாத வகையில் அடிப்படை, பாதுகாப்பு வசதிகளின்று பணியாற்றும் இரயில்வே தொழிலாளர்களுக்கு புதிய பென்ஷன் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்க NFIR தொடர்ந்து வலியுறுத்திய கருத்தினை ஏற்று இரயில்வே அமைச்சர் கடிதம் எழுதியிருந்தும் அதனை ஏற்க மறுத்திட்ட நிதி அமைச்சகத்தின் தவறான முடிவினை கண்டித்தும், புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்யும் உத்தரவை உடனே வெளியிட வைக்குமாறு **19.3.2018** அன்று இரயில்வே அமைச்சருக்கு GS/NFIR கடிதம் அனுப்பியுள்ளார். இருப்பினும் 10% பிடிப்பதை நிறுத்தி புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்வதே லட்சியமாக வைத்து SRES-NFIR தொடர்ந்து போராடி வருவதை அனைவரும் அறிவீர்கள்.

### இன்ஜினியரிங் பிரிவு

1. SRES-NFIR 7வது ஊதியக்குழுவிடம் தெரிவித்திருந்த மெமோரண்டம் Page No.75-80&158 Para No.14ல் தெரிவித்து **28.7.2014** அன்று வலியுறுத்தியதன் பயனாக டிராக்மெயின்டனர்களுக்கு ரிஸ்க் & ஹார்டுஷிப் அலவன்ஸ் மாதம் **ரூ.2700/–** ஐ **01.07.2017** முதல் வழங்கிட இரயில்வே போர்டு **10.8.2017** அன்று உத்தரவு பிறப்பித்தது. பல

இடங்களில் டிராக்மெயின்டனர்களுக்கு கொடுத்த பணத்தை பிடித்தம் செய்ய உத்தரவிட்டதை மாற்றி S.Rly., நிர்வாகத்திடம் தொடர்ந்து போராடி மீண்டும் பணத்தை பெற்றுதந்தது SRES - NFIR என்பதை அனைவரும் அறிவீர்.

2. கேட் கீப்பர்களாக பணிபுரியும் டிராக்மெயின்டனர்களுக்கு ரிஸ்க் & ஹார்டு ஷிப் அலவன்ஸ் மறுக்கப்பட்டதை Rly. Bd., மட்டத்தில் NFIR தொடர்ந்து வலியுறுத்தியதால் இவர்களுக்கு ரிஸ்க் & ஹார்டுஷிப் மாதம் ரூ.**2700/–**ம், ஸ்பெஷல் கேட் அலவன்ஸ் மாதம் ரூ.**1000/–** சேர்த்து வழங்க Rly. Bd., யிடமிருந்து உத்தரவு பெற்றுத்தந்தது.

3. வருடந்தோறும் ஜுலை **01**ந்தேதி அன்று டிரஸ் அலவன்ஸ் ரூ.**5000/10,000** வழங்க Rly. Bd., யிடமிருந்து உத்தரவு.

4. NFIR - Rly., Bd., PNM Sub No.31/2015 & 34/2016 மூலம் பெறப்பட்ட உத்தரவான **8** மணி நேர ரோஸ்டரை TVC டிவிஷனில் அமுல்படுத்தாததை கண்டித்து தெருமுனை போராட்டங்களையும், கோர்ட் மூலம் வாதாடியும் உத்தரவை பெற்று பலரும் ஜுன் **2018** சம்பளத்தில் லட்சக்கணக்கில் அரியர்சும் பெற்றுத்தந்தது SRES - NFIR.

5. **2013**ஆம் ஆண்டிற்கு முன்பு வரை டிராக்மேன்கள் டிராக்மேன்களாலேயே ஓய்வு பெற்ற நிலையை மாற்ற புரமோஷனல் அவென்யூவாக மாற்றி GP 1900ல் 22%, GP 2400/- ல் 12%, GP 2800/- ல் 6%ஆக பெற்றுத்தந்தாலும், மீண்டும் தொடர் போராட்டத்தினால் GP 2800/- ஐ 10%ஆகவும், GP 2400/-ஐ 20% ஆகவும், GP 1900 த்தை 20% ஆகவும், GP 1800ஐ 50% ஆகவும் உயர்த்தப்பட்ட சதவீதத்தில் உத்தரவை வெளியிட இரயில்வே போர்டு ஒப்புக்கொண்டுள்ளது.

6. NFIR - Rly. Bd., PNM Sub No. 4/2017, DC - JCM Item No. 46/2003 & 15/2012 மூலம் பேச்சுவார்த்தை நடத்தி வலியுறுத்தியதால் ஹெல்மெட், வேலை செய்வதற்கு ஏற்ற பொருட்கள், டிராக்மேன் பாதுகாப்பிற்கான முன்னெச்சரிக்கை கருவிகள், கீமேன் / மேட்களுக்கு CUG Phone வசதிகள் செய்வதற்கு Rly. Bd., உத்தரவிட்டிருந்தும் S.Rly.ல் முழுமையாக செயல்படுத்தாததாலும், கீ மேன்களின் வேலை பளுவை **3** கி.மீ. ஆகவும் மற்றும் **60** கிலிப்களாக குறைத்திட உரிய நடவடிக்கை எடுத்திட SRES - NFIR வலியுறுத்துகிறது.

7. S.Rly.,ல் அங்கீகாரத்தில் உள்ளவர்களால் நடக்கும் பாலியல் கொடுமைகளிலிருந்தும் டிராக்மெயின்டனர்களாக உள்ள பெண்களை பாதுகாக்கவும், மற்ற பிரிவுகளுக்கு மாற்றம் செய்திடவும் NFIR - Rly. Bd., PNM Sub No.23/2015 மூலம் வலியுறுத்தியுள்ளதால் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு Rly. Bd., குழுவை அமைத்துள்ளது.

8. NFIR-Rly., Bd., PNM Sub No.4/2017 மூலம் வலியுறுத்தியதால் a)Shoe Allowance Rs.2800/-, b)Rain Coat Rs.1200/-) Tool kit bag Rs.1400/-, d) Tri Colour LED 3 cells Torch Rs.1000/- மற்றும் பணியின்போது ஏற்படும் உயிரிழப்பை தடுக்க பெட்ரோல் மேன்/ டிராக்மேன் பாதுகாப்பிற்கான RAKSHAK பொருத்திட Rly., Bd., யிடமிருந்து SRES - NFIR **05.2.18** அன்று உத்தரவை பெற்றுத்தந்துள்ளது.

## டெக்னீஷியன்கள் / டெக்னிக்கல் சூப்பர்வைஸர்கள்

1. பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை CRC மூலம் பெறுகின்ற பதவி உயர்வை **01.11.2013** அன்று பெற்ற பிறகு டெக்னீஷியன் கிரேடு II & I மெர்ஜர் செய்ய வேண்டும் என்று SRES - NFIR தொடர்ந்து வலியுறுத்தியதால், இதனை ஏற்காத மத்திய அரசு 16% ஆக இருந்த Sr. Tech. ஐ 26%ஆகவும், 44% ஆக இருந்த Tech. Gr.I ஐ 51% ஆகவும், 20%ஆக இருந்து Tech. IIஐ 8% ஆகவும், 20%ஆக இருந்த Tech. Gr. IIIஐ 15% ஆகவும் மாற்றி **01.09.2016** முதல் மீண்டும் 2½ ஆண்டுகளில் CRCஐ அமுல்படுத்தியதால் **100** தொழிலாளர்களில் **32** தொழிலாளர்களுக்கு பதவி உயர்வை பெற்றுத்தந்தது SRES-NFIR என்பதை அனைவரும் அறிவார்கள். இதனடிப்படையில் பல இடங்களில் உயர் பதவியில் உள்ள காலியிடங்கள் மூலம் ஹெல்பர்களுக்கு Tech. Gr.III பதவி உயர்வு வழங்க வைத்தது SRES - NFIR என்பதை சரித்திரம் சொன்னாலும் தரித்திரம் கொண்டவர்கள் SRES - NFIR மீது புழுதிவாரி தூற்றுவதையே தொழிலாக செய்து வருவது வேடிக்கையாக இருக்கிறது.

2. NFIR - Rly., Bd., PNM Sub No. 12/2017 மூலம் கமிட்டியை அமைக்க வைத்து இன்சென்டீவை **3** மடங்கு உயர்த்தி **01.01.2016** முதல் அமுல்படுத்திட நடைபெற்ற **3**வது கூட்டத்தில் SRES - NFIR சார்பாக வலியுறுத்தப்பட்டதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக Rly., Bd., தெரிவித்துள்ளது.

3. டெக்னீக்கல் சூப்பர்வைஸர்களுக்கு அப்கிரேடேஷன் வழங்குவதற்கு NFIR - Rly., Bd., PNM Sub No. 3/2018 & 10/2018 மூலம் வலியுறுத்தி வருவதால் 67% ஆக உள்ள GP 4600/- ஐ பிரித்து GP 5400ல் 12%., GP 4800ல் 15%, GP4600ல் 40% ஆகவும், ஏற்கனவே 33% ஆக இருந்த GP 4200/-தொடர்வதற்கு Rly., Bd., GS/NFIR க்கு **17.4.2018** அன்று பதில் கடிதம் அனுப்பியுள்ளது.

4. இரயில்வேயில் குரூப் ‘C’ GP 4600/- ல் பல கேட்டகரிகளில் உள்ள **3335** சூப்பர்வைஸர்களுக்கு குரூப் ‘B’ அப்கிரேடேஷனுக்கான பரிந்துரையை இரயில்வே அமைச்சகம், நிதி அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது.

## டிராபிக் /கமர்ஷியல் பிரிவு

1. SRES - NFIR முயற்சியினால் செலக்ஷன் கிரேடிலிருந்த ஸ்டேஷன் சூப்பிரண்டன்ட் L.7 GP **4600** ஐ (Suitability with prescribed Bench mark) அடிப்படையில் Non - Selection ஆக மாற்ற Rly., Bd., உத்தரவு .

2. SM கேட்டகரியில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கு புதிய நடைமுறையை கீழ்கண்டபடி அமுல்படுத்த Rly., Bd., (RBE No. 22/2018 dt. 16.2.18) உத்தரவு பிறப்பித்துள்ளது. கமர்ஷியல் / டிராபிக் பிரிவிலிருந்து 25% காலியிடங்களை ஜெனரல் செலக்ஷனாகவும், ஆப்பரேட்டிங் & கமர்ஷியல் பிரிவிலிருந்து 15% காலியிடங்களை LDCE மூலமாகவும் **30** வயதுக்குள்ள பட்டதாரிகளை 60% டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் மூலம் நிரப்ப முடிவு.

3. ASM போஸ்ட்கள் SM ஆக அப்கிரேடு செய்யப்பட்டு GP 4200 வழங்க வைத்தது. 75% டிராபிக் / கமர்ஷியல் தொழிலாளர்கள் ஸ்டேஷன் மாஸ்டராக சென்று பயனடைவதற்கு Rly., Bd., யிடமிருந்து உத்தரவை பெற்று தந்தது.

4. SRES - NFIRன் தொடர் முயற்சியின் பயனாக SCP பெயரை பாயின்ட்ஸ்மென் ‘B’ ஆக மாற்றி Rly., Bd,. உத்தரவு. இதனை மீண்டும் திருத்தம் செய்து Traffic Assistant ஆக அறிவிக்க வேண்டும் என NFIR வலியுறுத்தியுள்ளது.

5. டிராபிக் தொழிலாளர்களுக்கு இருந்த தேர்வை ரத்து செய்து டெக்னீஷியன்களுக்கு இருப்பது போன்று புதிய புரமோஷனல் அவன்யூ உருவாக்கி GP 1800 Pointsman ‘B’ 10%. GP 1900 Pointsman ‘A’ - 30% GP 2400 Shunting

Jamadhar 30%, GP 4200 Shunting Master 30% ஆக நிர்ணயம் செய்ய வேண்டும் என GS/NFIR 5.10.18 & 09.10.18 தேதிகளில் Rly., Bd.,க்கு கடிதம் எழுதியுள்ளார்.

## Running Staff

1. NFIR Rly., Bd., PNM Sub No. 57/2016 மூலம் **9** ஆண்டுகளாக தொடர்ந்து வலியுறுத்தி பேச்சுவார்த்தை நடத்தியதன் அடிப்படையில் 30% பே எலமென்டை லீவ் சேலரிக்கு கணக்கில் எடுத்துக்கொண்டு **1.1.2006** முதல் **31.8.2008** அரியர்சுடன் வழங்க Rly., Bd., உத்தரவு பிறப்பித்தது. (RBE No. 148/2017 dt 16.10.2017)
2. 30% பே எலமென்ட் மற்றும் 55% டெர்மினல் பெனிபிட்ஸ்ஸை இரயில்வே போர்டிடம் பேசி **24.1.17** அன்று உத்தரவு.
3. **14.29**% சம்பள உயர்வை ரன்னிங் ஸ்டாப்களுக்கு மறுத்ததை PNM 05/17ல் பேசி இரயில்வே போர்டிடம் உத்தரவு.
4. GP - 4600/- ஐ LP/ Mail & Express டிரைவர்களுக்கும் மேலும் Rs. 2000/- த்தை ALP களுக்கு வழங்க அனாமலி கமிட்டி மூலமாக வழங்க வலியுறுத்தப்பட்டது.
5. KMAவை **1.1.16** முதல் மாற்றி அமைத்து விரைவில் வழங்க நடவடிக்கை.
6. EMU Cabல் உள்ள **25** பிரச்சினைகளை Rly., Bd., PNM No. 7/2017 மூலமாக சரி செய்யப்பட்டு வருகிறது.
7. அனைத்து கேப் & ரன்னிங் ரூம்களிலும் AC வசதியை ஏற்படுத்திடவும், SPAD உள்ள பிரச்சினைகளை விரைவில் கலைந்திடவும் SRES-NFIR வலியுறுத்திவருகிறது.
8. Train Guard பதவியை Train Mangerகளாக மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை.
9. Periodical rest to be 40 hrs. Duty hours at a stretch to be reduced from the present 9 hrs.

## Ministerial / Accounts

1. GP 1900 & GP 2800,GP 4200ல் 20% கிராஜிவேட் என்ட்ரி இருப்பதால் GP 4800 & GP 5400 வழங்கவும்.
2. SSO(A), Sr. ISA, Sr.TIAக்கான **900**க்கு மேலான போஸ்ட்டுகளுக்கு கடந்த **16** ஆண்டுகளில் **9** முறை தேர்வு நடத்தியும் பயனில்லாததால், நேரடி தேர்வு மூலம் நிரப்பும் முயற்சியை NFIR-PNM Sub No.41/2015 மூலம் தடுத்தது.
3. அக்கவுன்ட்ஸ் ஸ்டாப்களுக்கு GP 5400, CMTஸ்டாப்களுக்கு GP 4200/-ஐ GP 4600 ஆகவும், GP 4800 & GP 5400 வழங்கிடவும், NFIR கோரிக்கையை ஏற்று நிதி அமைச்சகத்திற்கு Rly., Bd., **21.5.2018** கடிதம்.

## மெடிக்கல்

1. HPCA/PCA ரூ.**4100/–**, ரூ.**5400/–**ஆக உயர்த்தப்பட்டது. ஹாஸ்பிடலில் உள்ள அனைவருக்கும் வழங்க நடவடிக்கை.
2. NFIR - Rly. Bd. PNM Sub No. 29/2017 மூலம் வலியுறுத்தியதன் பயனாக நர்சிங் கேட்டகரிகளுக்கு MACPS மூலம் **3**வது பைனான்ஷியல் அப்கிரேடேஷன் GP 6600/- PB -3 வழங்க Rly., Bd., 14.6.18 அன்று உத்தரவு.
3. NFIR - Rly. Bd. PNM Sub No. 11/2017 மூலம் டிரஸ்ஸர் கேட்டகரிகளுக்கு GP 1900 ஐ GP 2000 ஆகவும், GP 4200 வழங்கவும் வலியுறுத்தி வருவதால் குறைந்தபட்ச சம்பளம் GP 2000 வழங்குவதற்கான வரைவு திட்டத்தை இரயில்வே அமைச்சகம் நிதி அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளது.
4. சபைவாலா பெயரை ஹவுஸ் கீப்பிங் அஸிஸ்டென்ட் என பெயர் மாற்றி Rly., Bd., உத்தரவு பிறப்பித்துள்ளது.
5. நர்சிங் கேட்டகரிகளுக்கு யூனிபார்ம் அலவன்ஸாக ரூ.**1800/–**, நர்ஸிங் அலவன்ஸ் ரூ.**4800** லிருந்து ரூ.**7200/–** மற்றும் ஆப்பரேஷன் தியேட்டர் அலவன்ஸ் ரூ.**360** லிருந்து ரூ.**540/–** மாதந்தோறும் வழங்க உத்தரவு.
6. NFIR / PNM Sub No.23/2014 மூலம் மெட்ரிக் தேர்ச்சி அடையாத அட்டென்டன்ட் சபைவாலா 50% டிரஸ்ஸர்/ OTA ஆகவும், மீதமுள்ள 50% கல்வித்தகுதியுடன் தேர்வு செய்வதற்கு Rly., Bd., மூலம் உத்தரவு பெற்றுத்தந்தது.
7. பாரா மெடிக்கல் டெக்னீஷியன்கள் / லேப் ஸ்டாப் அவர்களுக்கு கல்வித்தகுதி இருந்தும் 7வது ஊதியக்குழு அவர்களின் வேலைக்கேற்ப சம்பள நிர்ணயம் செய்ய NFIR - PNM Sub No. 60/2012 மூலம் வலியுறுத்தல்.

## பொதுவான சாதனைகள்

1. யூனிபார்ம் போடுபவர்கள் அனைவருக்கும் டிரஸ் அலவன்ஸ் ரூ.**5000/–**, ரூ.**10,000/–** வழங்க Rly., Bd., உத்தரவு.
2. செகந்திராபாத்தில் **13** ஆண்டுகளுக்கு முன்பாக NFIR நடத்திய சேப்டி கூட்டத்தில் இரயில்வே அமைச்சருடன் பேசி Full Board கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு SRRS திட்டத்தை கொண்டு வந்து LARSGESS திட்டமாக மாற்றி **60** ஆயிரத்திற்கும் மேலான தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வேலை வாங்கிக்கொடுத்தோம். தற்போது கோர்ட் தடை செய்துள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையை SRES-NFIR எடுத்துள்ளது.
3. NFIR எடுத்த தொடர்முயற்சியின் பயனாக **6**வது ஊதியக்குழு அமுல்படுத்திய போது மெர்ஜர் செய்யப்பட்ட கிரேடுகளில் **01.01.2006** முதல் **31.8.2008** க்கு இடைப்பட்ட காலத்தில் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பே ரீ பிக்சேஷன் செய்து **8** முதல் **10** ஆண்டுகளுக்குண்டான கூடுதல் பணத்தை அரியர்சுடன் பெற்றுத்தந்தது.
4. NFIRன் தொடர் முயற்சியினால் ரூ.**1500/–** ஆக இருந்த CEA மாதம் ரூ.**2250/–** ஆகவும் ரூ.**4500/–** ஆக இருந்த ஹாஸ்டல் சப்ஸைடி மாதம் ரூ.**6750/–** ஆகவும், டிராவலிங் அலவென்ஸ் லெவல் **1** முதல் **5** வரை ரூ.**450/–** ஆகவும், லெவல் **6** முதல் **8** வரை ரூ.**750/–** ஆகவும் வழங்க Rly., Bd., உத்தரவு.
5. காங்கிரஸ் கட்சியின் துணை கொண்டு **5**வது ஊதியக்குழுவில் 31%, **6**வது ஊதியக்குழுவில் 54% சம்பள உயர்வு பெற்றுத்தந்தது SRES - NFIR. 7வது ஊதியக்குழுவில் **14.28** % சம்பள உயர்வையும், பெற்றுக் கொண்டிருந்த அலவன்ஸ் & அட்வான்சுகளை இழந்தும், HRA 24%,16%, 18% ஆக குறைத்தும், குறைந்த பட்ச சம்பளம் ரூ.**26000/–** பெற முடியாமல் போனதற்கு தொழிற்சங்கங்களிடையே ஒற்றுமை இல்லாமல் போனது தான் காரணம்.
6. Very Good இருந்தால் தான் MACPS மூலம் பதவி உயர்வு என்ற மத்திய அரசின் உத்தரவை மாற்ற NFIR - Rly., Bd., PNM Sub No. 22/2017 மூலம் தொடர்ந்து வலியுறுத்தியதால் **2014–15, 2015–16, 2016–17** நிதியாண்டுகளில் பதவி உயர்வு பெறாமல் தவித்துக் கொண்டிருப்போருக்கு One time measure ஆக Good இருந்தால் போதும் என்று கூறி பதவிஉயர்வு வழங்க இரயில்வே போர்டிடமிருந்து **27.2.18** அன்று உத்தரவை பெற்று தந்தது SRES - NFIR. இந்த உத்தரவை தொடர்ந்து அமுல்படுத்துவதற்கான திருத்தத்தை செய்திட SRES - NFIR முயற்சி.
7. NFIR - Rly., Bd., PNM Sub No. 36/2015 மூலம் வலியுறுத்தியதன் அடிப்படையில் இன்டர் டிவிஷனல் ரெக்கியூஸ்ட் டிரான்ஸ்பருக்கு இருந்த சர்வீஸ் கண்டிஷனை முழுவதுமாக நீக்கி Rly., Bd., கடந்த **31.08.2015** அன்று உத்தரவு பிறப்பித்தது. NFIR - Rly., Bd., PNM Sub No.18/2016 மூலம் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில்

இன்டர் இரயில்வே ரெக்கியூஸ்ட் டிரான்ஸ்பருக்கு இருந்த **5** வருட சர்வீஸ் கன்டிஷனை மீநூச்சுவல், ஸ்பவுஸ் கிரவுண்ட்,டிஸ்ஸபல்டு குழந்தைகளை பராமரிக்கும் தொழிலாளர்கள், டிஸ்சபல்டு சேலஞ்ச் தொழிலாளர்களுக்கு நீக்கி **10.2.2017** அன்று Rly., Bd., உத்தரவு பிறப்பித்தது. மேலும் உடனடியாக டிரான்ஸ்பர் செய்வதற்கான அதிகாரத்தை DRM களுக்கு Rly., Bd., Lr.No.2018 /Trans Cell./Representation dt. 01.11.2018 உத்தரவு.

8. 7வது ஊதியக்குழு சம்பளத்தின் அடிப்படையில் OT அலவன்ஸ் வழங்க வலியுறுத்திய போது **01.7.2017** முதல் அமுல்படுத்த Rly., Bd., 28.11.2017 அன்று உத்தரவு பிறப்பித்தது. OT அலவன்ஸ் என்பது சம்பளத்தின் ஒரு பகுதி என NFIR-DC/JCM Item No, 24/2010 மூலம் பெறப்பட்ட உத்தரவுப்படி **01.01.2016** முதல் முன்தேதியிட்டு அமுல்படுத்த Rly., Bd., (RBE No.41/2018) 20.3.2018 அன்று உத்தரவு பிறப்பித்தது.
9. முன்னாள் இராணுவத்தினர்களின் பிரச்சினைகளுக்கு NFIR - PNM Sub No. 01/2013 & 05/2016 வலியுறுத்தல்.
10. SRESன் முயற்சியால் 7th CPC படி புரமோஷன் பெற்றவர்களின் பே பிக்ஸேஷனை Rule 13 of CCS(RP) Rule 2016 படி ஆப்ஷன் அடிப்படையில் ரீ பிக்ஸேஷன் செய்து கூடுதல் இன்கிரிமெண்ட் வழங்க Rly., Bd., 31-7-2017ல் உத்தரவு.
11. NFIR - PNM Sub No.36/2015 மூலம் குரூப் 'D' தொழிலாளர்கள் ஒரு பிரிவிலிருந்து வேறு பிரிவிற்கு மாற்றம் செய்து கொள்வதற்கு Rly., Bd., உத்தரவு பிறப்பித்தது. RBE No. 99/2018 dt.6.7.18
12. சென்னைக்கு வழங்கப்படும் HRA மற்றும் டிரான்ஸ்போர்ட் அலவன்ஸை அரக்கோணம், திருத்தணி, பொன்பாடி, கும்மிடிபூண்டி, எலாவூர், அச்சரபாக்கம், செங்கல்பட்டு, பாலூர், காஞ்சிபுரம், தக்கோளம், திருமால்பூர் போன்ற பகுதிகளுக்கும் வழங்க வேண்டும் என்று NFIRன் கோரிக்கைக்கு நிதி அமைச்சகம் கடந்த **2.7.18** அன்று கடிதம்.
13. NFIR எடுத்த தொடர் முயற்சியின் பயனாக GP 4600ல் உள்ள அனைத்து சூப்பர்வைஸர்களுக்கும், GP4800 வழங்கிட நிதி அமைச்சகத்திற்கு **20.4.17, 25.5.18** மற்றும் **13.7.18** தேதிகளில் இரயில்வே அமைச்சகம் கடிதம்.
14. வருமான வரி சமர்ப்பிக்கும் சிறப்பு முகாமை பெரம்பூரில் உள்ள SRES மத்திய சங்க அலுவலகத்தில் தொடர்ந்து இரண்டு மாதங்கள் IT Return File இலவசமாக செய்ததால் **5200** தொழிலாளர்களுக்கு மேல் பயனடைந்தனர்.

தொழிலாளர்களுக்கு விரோதமாக S.Rly.,ல் நடைபெறும் அராஜகம், அடாவடித்தனம், கொலை வெறித்தாக்குதல், பாலியல் கொடுமைகளை எதிர்த்தும், உரிய நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தியும் பலவித போராட்டங்களை தொழிலாளர்களின் நன்மைக்காக SRES - NFIR தொடர்ந்து நடத்தி வருகிறது.

மத்திய அரசின் தொழிலாள விரோத போக்கை கண்டித்து தேசிய அளவில் NJCA மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் கட்டளைப்படி **2016** ஜுலை **11** முதல் நாடு தழுவிய தொடர் வேலை நிறுத்தம் செய்வதற்கு மத்திய அரசு தொழிலாளர்களிடையே ஒன்று பட்ட போராட்டமாக உருவெடுத்த நேரத்தில் மத்திய அமைச்சர்களிடம் தொலைபேசியில் பேசிவிட்டதாகவும், கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டதாகவும் கூறி S.Rly., யில் உள்ள ஒரே அங்கீகார தொழிற்சங்கம் **2016** ஜுலை **01** அன்று பகல் தன்னிச்சையாக வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றதை அனைவரும் அறிவோம். இருப்பினும் தலைவர்கள் **01.07.2016** அன்று மாலை புதுடெல்லியில் கூடி எவ்வித முடிவும் இதுவரை எடுக்கவில்லை. வேலை நிறுத்த போராட்டம் திட்டமிட்டபடி நடக்கும் எனவும் வரை மத்திய அரசிற்கு அவகாசம் கொடுத்தனர். மீண்டும் NJCA தலைவர்கள் **06.07.2016** அன்று ஒன்று கூடி மத்திய அமைச்சர்களிடம் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் நாம் வைத்த கோரிக்கைகளுக்கு High Level Committee அமைத்து **4** மாதத்திற்குள் தீர்வு காணப்படும் என மத்திய அரசின் குரூப் ஆப் மினிஸ்டர்ஸ் வாக்குறுதி தந்தனர். இதனடிப்படையில் **11.07.2016** முதல் நடத்தவிருந்த காலவரையற்ற தொடர்வேலை நிறுத்தம் தள்ளி வைப்பது என மேற்கூறிய அனைத்து தொழிற்சங்க தலைவர்களும், கம்யூனிஸ்ட் தொழிற்சங்க தலைவர்கள் உட்பட கையொப்பமிட்டுள்ளனர். இங்குள்ள DREUக்கு தெரிந்தும், தெரியாததுபோல் நடித்துக் கொண்டு இரயில்வே சம்மேளனங்கள் மௌனம் காப்பதாகவும், எதிர்த்து போராடாமல் அமைதி காப்பதாகவும் சொல்லி முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்து, பொய்யை திரும்ப, திரும்ப சொல்லி அதனை உண்மையாக சித்தரிக்க முயலும் DREUன் செயல் இருந்தாலும், SRES-NFIR தொழிலாளர்களுக்காக தொடர்ந்து போராடி வருவதை அனைவரும் அறிவீர்.

பொதுவான கோரிக்கைகளை நிறைவேற்ற மறுக்கின்ற மத்திய அரசை கண்டித்து INTUC மற்றும் மத்திய தொழிற்சங்கங்கள் இணைந்து **2019** ஜனவரி **8** மற்றும் **9** தேதிகளில் நடத்துகின்ற நாடு தழுவிய வேலை நிறுத்தம் வெற்றி அடைந்திடவும் மற்றும் இரயில்வேயில் புதிய பென்ஷன் திட்டம் ரத்து, 100% அந்நிய நேரடி முதலீடு ஒழிப்பு, குறைந்தபட்ச சம்பளம் ரூ.**26000/–** பெறுவது, HRAவை 30%, 20%, 10% ஆக மாற்றுவது, ரத்து செய்த **52** அலவன்சுகள் மற்றும் அட்வான்சுகளை பெறுவது, LARSGESS திட்டத்தை தொடர்ந்து அமுல்படுத்துவது, வருமானவரி உச்சவரம்பை உயர்த்துவது, டெக்னீஷியன் Gr.I வுடன் Gr.II மெர்ஜர் செய்வது , **2.5**லட்சம் பணி காலியிடங்களை நிரப்புவது, பயிற்சி முடிந்த ஆக்ட் அப்ரண்டீஸ்களுக்கு வேலை வழங்குவது, MACPS திட்டத்தில் குறைகளை நீக்குவது போன்ற பல கோரிக்கைகளை நிறைவேற்ற இந்திய இரயில்வே முழுவதும் அனைத்து GM/DRM/CWM அலுவலகங்கள், பணிமனைகள், டெப்போக்கள் முன்பாக ஜனவரி **8,9** தேதிகளில் SRES - NFIR ஆர்பாட்டம் நடத்தவுள்ளது. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மத்திய அரசிடமும், இரயில்வே போர்டிடமும் பல கட்ட பேச்சு வார்த்தை நடத்தியும், பல்வேறு போராட்டங்களை தொடர்ந்து நடத்தியும் தொழிலாளர்களுக்கு

**நன்மைகள் செய்து வரும் பெடரேஷன் உள்ள SRES க்கு வருகின்ற தொழிற்சங்க அங்கீகார தேர்தலில்**

**இரயில் என்ஜின் சின்னத்திற்கு வாக்களிப்பீர்.**

**SRES யைவெற்றி பெற செய்வீர்.**

**ICF ல் வேலைக்கு சேர்ந்த 308 சப்ஸ்டியூட்களையும் 24.12.2018 அன்று நிரந்தரம் செய்ததை போன்று S.Rly., யில் வேலைக்கு சேர்ந்த 530 சப்ஸ்டியூட்களையும் உடனே நிரந்தரம் செய்து அவர்கள் விருப்பத்திற்கேற்ப டிரான்ஸ்பர் வழங்கிட S.Rly., நிர்வாகத்தை SRES - NFIR வலியுறுத்தியுள்ளது.**

**Dr.M.இராகவையா**
தலைவர்

**27.12.2018**

அறிக்கை எண் **923**

**P.S.சூரியபிரகாசம்**
பொதுசெயலாளர்